www.Padasalai.Net

பள்ளிக் கல்வித் துறை - திருப்பத்தூர் மாவட்டம்

# மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு (DLMC)

**அமைப்புக் கூட்டம்**

**கூட்ட நடவடிக்கைக் குறிப்பு- நாள்: 6.9.2024**

அரசுப் பள்ளிகளில் செயல்பட்டு வரும் பள்ளி மேலாண்மைக் குழுவுக்கான கூட்டங்களில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை கவனிப்பதற்காகவும், அரசுப் பள்ளிகளின் பன்முகத் தேவைகளை நிறைவேற்றவும் மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர் தலைமையில் இன்று அமைக்கப்பட்டது. இக்கூட்டத்தின் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள் பின்வருமாறு:

1. பள்ளிக் கல்வித்துறை அரசாணை எண்:74, நாள்:12.3.2024-இன் படி அமைக்கப்பட்டுள்ள இக்குழுவில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், ஊரக வளர்ச்சி திட்ட இயக்குனர், நகராட்சி ஆணையர், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட சமூக நலத்து'றை அலுவலர், மண்டல போக்குவரத்து அலுவலர், மின்சாரத்துறை கண்காணிப்புப் பொறியாளர், உயர்கல்வி மண்டல இணை இயக்குனர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர், மருத்துவத் துறை துணை இயக்குனர், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் ஆகியோர் உள்ளனர். இவர்களுடன் 2 தலைமையாசிரியர்கள், 2 ஆசிரியர்கள், 4 எஸ்.எம்.சி. உறுப்பினர்கள் மற்றும் 2 குடிமைச் சமூக அமைப்பாளர்கள் என மொத்தமாக 24 உறுப்பினர்கள் உள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர் இக்குழுவின் தலைவராகவும், முதன்மைக் கல்வி அலுவலர் உறுப்பினர் செயலராகவும் செயல்படுவார்கள்.

SMC RESOLUTION - CONSOLIDATION REPORT 2022-24

| S NO | NAME OF THE DEPARTMENT | NO.OF RESOLUTION | NO.OF RESOLUTION RESOLVED | NO.OF RESOLUTION IN PROGRESS | NO.OF RESOLUTION NOT STARTED |
|---|---|---|---|---|---|
| 1 | TAMILNADU POLICE DEPARTMENT | 223 | 158 | 26 | 33 |
| 2 | DIFFERENTLYABLED AND WELFARE DEPARTMENT | 14 | 9 | 1 | 3 |
| 3 | FIRE AND RESCUE SERVICE | 1 | 0 | 0 | 1 |
| 4 | DISTRICT SOCIAL WELFARE OFFICER | 22 | 7 | 8 | 7 |
| 5 | RURAL DEVELOPMENT | 260 | 174 | 35 | 44 |
| 6 | REVENUE & DISASTER MANAGEMENT | 21 | 16 | 1 | 4 |
| 7 | PUBLIC WORKS DEPARTMENT | 49 | 15 | 5 | 27 |
| 8 | HEALTH AND FAMILY WELFARE DEPARTMENT | 7 | 4 | 3 | 0 |
| 9 | TNEB DEPARTMENT | 180 | 82 | 14 | 82 |
| 10 | TRANSPORT OFFICE | 8 | 3 | 0 | 5 |
| 11 | ICDS - ANGANWADI | 9 | 1 | 8 | 0 |
| TOTAL | | 794 | 469 | 101 | 206 |

www.Padasalai.Net

2. மேற்கண்ட பட்டியலில் உள்ளபடி சென்ற இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட 794 பள்ளி மேலாண்மைக் குழுத் தீர்மாணங்களில் 469 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 325 தீர்மானங்களை துறை வாரியாக நடவடிக்கை எடுத்து விரைவாக முடித்திட வேண்டும் என்று அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் ஆட்சியர் அறிவுரை வழங்கினார்.

3. துறை வாரியாக கடந்த 2022 முதல் 2024 வரை பள்ளி மேலாண்மைக் குழுக்களின் மூலம் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் கடந்த ஜூன்2024 வரையில் தீர்த்துவைக்கப்பட்ட, நடைமுறையில் உள்ள மற்றும் இதுவரை தொடங்கப்பெறாத விவரங்கள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் தனித்தனி கோப்புகளாக வழங்கப்பட்டன.

4. மிகக் குறிப்பாக வரவிருக்கும் வடகிழக்குப் பருவமழைக் காலத்தை எதிர்கொள்ளும் விதமாக பள்ளிக் கல்வித் துறை மூலமாக முன் வைக்கப்பட்டுள்ள இடிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ள கட்டடங்களின் மீது உடனடியான கவனம் செலுத்தி உரிய விதிப்படி அரசுப் பள்ளிகளின் கட்டட உறுதித் தன்மையைச் சோதித்து பள்ளி மாணவர்களின் பாதுகாப்பைக் கருதி விரைந்து இடிக்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்களால் பொதுப் பணித்துறை செயற்பொறியாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.

5. 12-ஆம் வகுப்பு முடித்து இதுவரை உயர்கல்வியில் சேராத மாணவர்களுக்காக இம்மாதத்தில் 4 நாட்களில் நடைபெறவிருக்கிற உயர்வுக்குப்படி முகாம்களில் மாணவர்களைக் கலந்து கொள்ளச் செய்ய அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் முழுமுயற்சியுடன் செயலாற்ற வேண்டும்.

6. இதர வகுப்புகளில் படித்து இடைநின்ற மாணவர்கள் ஒருவரையும் விடாமல் மீண்டும் பள்ளியில் சேர்க்கும் பணியிலும் அதே அர்ப்பணிப்புடன் தங்கள் வசம் உள்ள பணியாளர்களைக் கொண்டு செயலாற்றிட வேண்டும். கல்வித் துறையைச் சார்ந்த ஆசிரியர்கள் உள்ளிட்டவர்கள் ஏற்கனவே இப்பணியைச் செய்து வந்தாலும், பிற துறையைச் சேர்ந்தவர்களும் இப்பணியில் இணையும்போதுதான் நமது மாவட்டம் கல்வியில் நல்ல இடத்தை நோக்கி நகரும் என்று ஆட்சியர் கூறினார்.

7. NSNOP தளத்தில் அரசுப் பள்ளியில் படித்த அனைவரும் ALUMNI REGISTRATION பகுதியில் தங்களை முன்னாள் மாணவராகப் பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும், அதே போல ஆட்சியரும் தாம் படித்த அரசுப் பள்ளியில் முன்னாள் மாணவராகப் பதிவு செய்து கொள்ள உள்ளதாகவும் கூறினார்.

8. வடுகமுத்தம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் 8-ஆம் வகுப்பு படித்துவரும் சிரஞ்சீவி என்ற உடலியக்க மாற்றுத்திறன் மாணவருக்கு மின்சாரத்தில் இயங்கும் சக்கர நாற்காலி வேண்டும் கோரிக்கையை உடன் நிறைவேற்றித் தர மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் இசைந்தார்.

9. ஒவ்வொரு துறையிலும் பள்ளிக் கல்வி தொடர்பாக மேற்கொண்ட பணிகள் குறித்த அறிக்கையை அடுத்த மாதம் நடைபெறவிருக்கிற மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தினார்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
திருப்பத்தூர் மாவட்டம்.

www.Padasalai.Net

